நகராட்சி அலுவலகம்
திருவத்திபுரம்.

மன்ற கூட்ட அறிவிப்பு

திருவத்திபுரம் நகரமன்றத்தின் சிறப்புக்கூட்டம் 16.11.2020 ஆம் நாள் திங்கட்கிழமை காலை 11.00 மணிக்கு நகரமன்றத்தின் சிறப்புக்கூட்டம் கீழ்கண்ட பொருளை முடிவு செய்ய நடைபெற உள்ளது.மேற்படி கூட்டத்தில் துறை சார்ந்த அலுவலர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தனி அலுவலர்,
திருவத்திபுரம் நகராட்சி

**பொருள் எண்:2**

திருவத்திபுரம் நகரின் எல்லைக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் 2018–ஆம் ஆண்டுக்கு திறந்த வெளியில் கழிப்பிடமாக பயன்படுத்தும் நிலை இல்லை என சான்று மத்திய அரசின் நகர்புறம் மற்றும் வீட்டு வசதி அமைச்சகத்தின் சான்று பெறப்பட்டுள்ள நிலையில் இதனை தொடர்ந்து அடுத்த சான்றான ODF+ பெற விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து பொது மக்களிடமிருந்து இதனை நடைமுறைபடுத்திடும் வகையில் ஏதாவது ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகள் இருப்பின் 15 நாட்களுக்குள்ளாக கருத்துக்களை தெரிவித்திட மன்ற ஒப்புதலுடன் தமிழ் தினசரி நாளிதழில் இரண்டில் ஒரு நாள் மட்டும் விளம்பரம் செய்யப்பட்டது. இவ்விளம்பரத்தால் இப்பொருள் தொடர்பாக பொது மக்களிடமிருந்து எவ்வித தகவல்கள் ஏதும் வரப்பெறாமையால் இதன்படியாக இந்நகரில் ODF+ சான்று பெறவும் இதனை நடைமுறைப்படுத்திடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ப.அ. 1) மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1138/2017/எச்1

16/11/2020

தனி அலுவலர்,
திருவத்திபுரம் நகராட்சி

நகராட்சி அலுவலகம்
திருவத்திபுரம்.

<u>மன்ற கூட்ட அறிவிப்பு</u>

திருவத்திபுரம் நகரமன்றத்தின் சாதாரணக் கூட்டம் 30.11.2020 ஆம் நாள் திங்கட்கிழமை காலை 11.00 மணிக்கு நகரமன்றத்தின் சாதாரணக் கூட்டம் கீழ்கண்ட பொருளை முடிவு செய்ய நடைபெற உள்ளது.மேற்படி கூட்டத்தில் துறை சார்ந்த அலுவலர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தனி அலுவலர்,
திருவத்திபுரம் நகராட்சி

<u>பொருள் எண் 1</u>

திருவத்திபுரம் நகராட்சிக்கு சொந்தமான TN 25 AV 0245 ஈப்பு வாகனத்தில் பழுதடைந்த பாகங்களை பழுது நீக்கம் செய்து தரக் கோரி அரசு அங்கீகாரம் பெற்ற ஜெயின் கார்ஸ்,திருவண்ணாமலை சர்வீஸ் நிறுவனத்திற்கு வாகனம் அனுப்பி வைக்கப்பட்டது. மேற்படி வாகனத்தை பழுது நீக்கம் செய்ய விலைப்புள்ளி உத்தேச தொகை ரூ.56792—யை வழங்கியுள்ளனர். மேற்படி வாகனத்தை பழுது நீக்கம் செய்ய ஆகும் உத்தேச செலவினம் தொகை ரூ.56792—க்கான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியின் கீழ் செலவினம் மேற்கொள்ள தனி அலுவலரின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:

ஈப்பு வாகனத்தின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்:2015/2020/இ1

<u>பொருள் எண் 2</u>

திருவத்திபுரம் நகராட்சியில் பயன்பாட்டில் உள்ள ஈப்பு வாகனம் எண்:TN 25 AV 0245 வாகனத்தில் பழுதடைந்துள்ளதால் வாகனம் இயக்க முடியாத நிலை உள்ளது. மேற்படி வாகன தேவையை கருத்தில் கொண்டு அவசர அவசியம் கருதி திரு.ச.இளம்வழுதி ஈப்பு ஒட்டுநர் அவர்களின் சொந்த செலவில் பழுதடைந்த பாகங்கள் பழுது நீக்கம் செய்யப்பட்டு உள்ளூர் பழுது பார்ப்பு நிறுவனத்திடமிருந்து கேட்புப் பட்டியல் பெறப்பட்டு செலவினம் ரூ.38920.00 வழங்கப்பட்டுள்ளது. மேற்படி தொகை ரூ.38920—யை செலவினம் மேற்கொண்ட திரு.ச.இளம்வழுதி ஈப்பு ஒட்டுநருக்கு வழங்கவும், அதற்கான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் தனி அலுவலரின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:</u>

பணியின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்:2774/2020/இ1

<u>பொருள் எண் 3</u>

திருவத்திபுரம் நகராட்சி பொறியியல் பிரிவில் இயங்கி வரும் ஈப்பு வாகனம் TN 25 AV 0245 வாகனத்திற்கான வாகன காப்பீடு 2020—2021ஆம் ஆண்டிற்கு புதுப்பிக்க கோரி

United India Insurance Company Ltd நிறுவனத்திடமிருந்து கேட்புப் பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்படி ஈப்பு வாகனம் TN 25 AV 0245க்கான கேட்புப் பட்டியல் தொகை ரூ.13880.00–யை வருவாய் நிதியின் கீழ் செலவினம் மேற்கொண்டு United India Insurance Company Ltd நிறுவனத்திற்கு பட்டியல் தொகை ரூ.13880.00யினை வழங்கவும் தனி அலுவலரின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:</u>

ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்:1901/2019/இ1

<u>பொருள் எண் 4</u>

திருவத்திபுரம் நகராட்சியில் குடிநீர் மற்றும் வடிகால் நிதி 2020–2021ன் கீழ் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளான வார்டு எண்:1 முதல் 27 வரையிலான பகுதிகளில் உள்ள சிறுமின் விசைப்பம்பு, கைப்பம்பு மற்றும் தலைமை நீரேற்று நிலைய மின் மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை பழுது பார்க்கும் பணி ஆண்டு பராமரிப்பு மேற்கொள்ள தோராய செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:</u>

ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்:1503/2019/இ1

<u>பொருள் எண் :5</u>

திருவத்திபுரம் நகராட்சியில் குடிநீர் மற்றும் வடிகால் நிதி 2019–2020ன் கீழ் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளான வார்டு எண்:1 முதல் 27 வரையிலான பகுதிகளில் உள்ள குடிநீர் விநியோக மெயின் லைன்கள், பகிர்மான குழாய் பைப்லைன்கள், வால்வுகள், மற்றும் பொது குழாய்களில் ஏற்படும் பழுதுகளை பழுது பார்க்கும் பணி ஆண்டு பராமரிப்பு மேற்கொள்ள தோராய செலவினம் ரூ.9.00 இலட்சத்திற்கு தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:</u>

ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்:1503/2019/இ1

<u>பொருள் எண்: 6</u>

திருவத்திபுரம் நகராட்சியில் வடகிழக்கு பருவமழை எதிர்கொள்ள வேண்டி தளவாட பொருட்கள் வாங்க மதிப்பீடு ரு.1.30 இலட்சத்திற்கு கொள்முதல் செய்தல் பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதயின் கீழ் மேற்கொள்ளவும் தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:

பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் பணி மேற்கொண்டமைக்கு ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்:1503/2019/இ1

பொருள் எண்:7

திருவத்திபுரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பகுதிகளில் பழுது நீக்கம் செய்ய இயலாத சிறுமின் விசைப் பம்புகளுக்கு தேவையான 1.5எச்.பி.நீர்மூழ்கி மோட்டார்கள் மற்றும் பேனல்போர்டுகள் 3 எண்ணிக்கை புதியதாக கொள்முதல் செய்து பொருத்தி இயக்கி தருதல் பணி செய்ய விலைப்புள்ளிகள் 22.10.2020 தேதி வரப்பெற்ற விலைப்புள்ளிகள் விபரம் .

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | தொகை. ரூ. |
|---|---|---|
| 1. | திரு.பி.ரவி | ரூ.123000.00 |
| 2. | திரு.அ.தனசேகரன் | ரூ.117000.00 |
| 3. | திரு.டி.ராஜேந்திரன் | ரூ.129000.00 |

மேற்படி பணிக்கு குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு.எ.தனசேகரன் அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று பணி மேற்கொண்டமைக்கு தனி அலுவலரின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:

பணியின் அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் பணி மேற்கொண்டமைக்கு ஒப்புதல் வழங்கலாம்

ந.க.எண்.2585/2020/இ1

பொருள் எண் 8

திருவத்திபுரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நகராட்சி மூலம் தெரிவிக்கப்பட்டுள்ள குடிநீர் விநியோக பைப்லைன், சிறுமின் விசைப் பம்பு மற்றும் கைப்பம்புகள் பழுது பார்த்தல் பணி செய்ய விலைப்புள்ளிகள் 28.08.2020ஆம் தேதி கோரியதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் விபரம் .

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | தொகை. ரூ. |
|---|---|---|
| 1. | திரு.பி.ரவி | ரூ.71600/- |
| 2. | திரு.அ.தனசேகரன் | ரூ.72000/- |
| 3. | திரு.டி.ராஜேந்திரன் | ரூ.73500/- |

மேற்படி பணிக்கு குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு.பி.ரவி அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று பணி மேற்கொண்டமைக்கு தனி அலுவலரின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:

ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்: 1203/2020/இ1

**பொருள் எண் 9**

திருவத்திபுரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பொது கழிப்பிடம் மற்றும் சமுதாய கழிப்பிடம் பராமரிப்பு பணி மேற்கொள்ள மதிப்பீடு ரூ.60000-க்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பொது சுகாதாரம் கருதி இப்பணியினை மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் தனி அலுவலரின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்:1503/2019/இ1

**பொருள் எண் 10**

திருவத்திபுரம் நகராட்சி தூய்மை இந்தியா திட்டம் – திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் மத்திய அரசின் MOUD துறையினர் STAR RATING ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கி வருகின்றனர். அதன் ஒரு பகுதியாக திருவத்திபுரம் நகராட்சியில் சேகரமாகும் திடக்கழிவுகளை, திடக்கழிவு மேலாண்மை விதிகளின்படி முறையே தரம் பிரித்து கையாளப்பட்டு வருகிறது. மேலும் (Secondary storage) இரண்டாம் நிலை சேகரிப்பு மற்றும் (Transportation) செய்து முற்றிலும் தவிர்க்கப்பட்டுள்ளது. எனவே, திருவத்திபுரம் நகராட்சியினை குப்பையில்லா நகராட்சியாக (Garbage Free City) மூன்று நட்சத்திர அங்கீகாரம் (Three Star Rating) பெறப்பட்ட நிலையில் மன்ற அங்கீகாரம் அடுத்த நிலைக்கான சுய உறுதிமொழி சான்றிதழ் (Self Declaration) மன்ற தீர்மானம் நிறைவேற்றிடவும், இதை நிறைவேற்றம் செய்திடவும் வேண்டப்படுவதுடன் இந்நகராட்சிக்கு உட்பட்ட பொது மக்கள் இப்பொருள் தொடர்பாக ஏதேனும் ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகள் இருப்பின் ஆணையாளர் திருவத்திபுரம் நகராட்சி அவர்களுக்கு இது குறித்த தகவலினை எழுத்து வாயிலாக 15 தினங்களுக்குள்ளாக தெரிவிக்குமாறும் உடன் இவ்வாறான விளம்பரத்தினை தினசரி நாளிதழ் இரண்டில் ஒரு நாள் மட்டு விளம்பரம் செய்திடவும், இவைக்கு ஆகும் தோராய செலவினத் தொகை ரூ.10,000-க்கும் (ரூபாய் பத்து ஆயிரம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ப.அ. 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2)பொது சுகாதார அவசர அவசியம் கருதி தற்போதிய அரசு அவசர வழிகாட்டுதலின்படியாக இப்பணியினை மேற்கொள்ளவும் இவைக்கு ஆகும் செலவினத் தொகைக்கும் மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.2516/2017/எச்1

பொருள் எண்:11

மாவட்ட ஆட்சித் தலைவர் – திருவண்ணாமலை அவர்களின்படி ந.க.எண். 9104–2020–சி4 நாள்: 15.06.2020ன்படி தற்போது பரவி வரும் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு பணியினை அரசு அறிவுரையின்படியான மாஸ்க் அணியாமல் வெளியே வருபவர்களிடம் குழுவாக வாகனம் மூலம் அபராதம் வசூலிக்க (வாகனம் வாடகை அடிப்படையில்) அமர்த்தப்பட்டு வசூலிக்கப்பட்டது. இவ்வாறான வாகனத்திற்கு வாடகை வழங்கிட மாவட்ட ஆட்சித் தலைவர் – திருவண்ணாமலை அவர்களின் அறிவுரையின்படியும், வட்டார போக்குவரத்து அலுவலர் அவர்களின் அறிவுரையின்படியும் இவைக்கான செலவினத் தொகையாக ரூ.41850–யை 01.10.2020 முதல் 31.10.2020 வரை வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ப.அ. 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) அவசர அவசியம் கருதி அரசு வழிகாட்டுதலின் அடிப்படையில் இப்பணி மேற்கொண்டதையும் இவைக்கான செலவினத் தொகையினையும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.722/2020/எச்1

**பொருள் எண்:12**

இந்நகராட்சி அலுவலகத்தில் பணிபுரியும் தூய்மை பணியாளர்கள் மற்றும் அனைத்து பணியாளர்களுக்கும் பணி மேற்கொள்ளும் போது கொரோனா வைரஸ் நோய் பரவாமல் இருக்க அரசு வழிகாட்டுதலின்படியாக மாஸ்க் சுமார் 2000 எண்ணிக்கையிலும், கையுறை 3000 எண்ணிக்கையிலும் அலுவலக பயன்பாட்டில் பயன்படுத்திட கிருமிநாசினியான HAND SANITIZER சுமார் 35 லிட்டர் புதியதாக வாங்கி பயன்படுத்திடவும் இவைக்கு ஆகும் தோராய செலவினத் தொகை ரூ.76,000–க்கு (ரூபாய் எழுபத்து ஆறு ஆயிரம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ப.அ. 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) தற்போதிய அரசு வழிகாட்டுதலின்படியாக மாஸ்க், கையுறை மற்றும் கிருமி நாசினியான HAND SANITIZER இவைகளை புதியதாக வாங்கி பயன்படுத்திடவும் இவைக்கான செலவினத் தொகையினையும் மன்றம் அனுமதி அனுமதிக்கலாம்.

ந.க.எண்.722/2020/எச்1

## பொருள் எண் 13

இந்நகராட்சி அலுவலகத்தில் பொது சுகாதாரப் பிரிவின் பயன்பாட்டிற்கு தேவையான முகவுறை, கையுறை மற்றும் கிருமிநாசினியான HAND SANITIZER புதியதாக சப்ளை செய்திட 19.11.2020ஆம் தேதி விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றன.

அவை:

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | 1க்கு/1 லிட்டருக்கு விலை விவரம் | |
|---|---|---|---|
| 1 | ராஜேஸ்வரி L.நாதன் கெமிக்கல்ஸ் & டிரேடர்ஸ்<br>நெ.115/90B 2வது மாடி,<br>பெரம்பூர், சென்னை – 11 | 1. மாஸ்க் 2000 எண் 1க்கு<br>2. கிளவுஸ் 3000 எண் 1க்கு<br>3. SANITIZER 35 லிட்டர் | ரூ. 9–<br>ரூ. 16–<br>ரூ.254– |
| 2 | SB & Co<br>No.1, ESI Nagar,<br>திருவாஞ்சேரி, சென்னை–73 | 1. மாஸ்க் 2000 எண் 1க்கு<br>2. கிளவுஸ் 3000 எண் 1க்கு<br>3. SANITIZER 35 லிட்டர் | ரூ. 13–<br>ரூ. 19–<br>ரூ.285–<br>(GST தனியே) |
| 3 | P.K.எண்டர்பிரைசஸ்,<br>நெ.5/3 Poxen Street,<br>பெரம்பூர், சென்னை – 11 | 1. மாஸ்க் 2000 எண் 1க்கு<br>2. கிளவுஸ் 3000 எண் 1க்கு<br>3. SANITIZER 35 லிட்டர் | ரூ. 16–<br>ரூ. 22–<br>ரூ.300–<br>(GST தனியே) |

மேற்கண்டவாறு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் வ.எண்.1–ல் உள்ள ராஜேஸ்வரி L நாதன் கெமிக்கல்ஸ்–சென்னை–11 அவர்களின் குறைந்த விலைப்புள்ளியினை மன்ற அங்கீகாரத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

ப.அ. 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) பொது சுகாதார அவசர அவசியம் கருதி இப்பணியினை மேற்கொள்ளவும் இவைக்கு ஆகும் செலவினத் தொகையினையும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.722/2020/எச்1

## பொருள் எண் 14

திருவத்திபுரம் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் – திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மத்திய அரசின் MOUD துறையினரின் STAR RATING ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்புகளுக்கும் வழங்கி வருகின்றன. இதன்படியாக இந்நகர் பகுதியில் குப்பையில்லா நகராட்சியாக [Garbage Free City] அடுத்த நிலை நட்சத்திர அந்தஸ்து பெறவும் இது குறித்து பொது மக்களிடையே இப்பொருள் தொடர்பாக ஆட்சேபனைகள் அல்லது ஆலோசனைகள்

இருப்பின் 15 நாட்களுக்குள்ளாக தெரிவித்திட தமிழ் தினசரி நாளிதழில் இரண்டில் ஒரு நாள் மட்டும் விளம்பரம் செய்யப்பட்டது.

இப்பொருள் தொடர்பாக பொது மக்களிடையே எவ்வித கருத்துருக்கள் ஏதும் வரப்பெறாமையால் மேற்கண்ட விவரப்படியான நிலையினை நடைமுறைப்படுத்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ப.அ. 1) மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க. எண்.2516/17/H1

30/11/2020
தனி அலுவலர்,
திருவத்திபுரம் நகராட்சி